# மதுரையின் பெருமை

பரிபாடலில் உள்ள கீழ் காணும் பாடல் தொல்காப்பியப் புறத்திரட்டின் இளம்பூரணர் உரையில் காணப் படுகிறது

உலகம் ஒருநிறையாத் தானோர் நிறையப்
புலவர் புலக்கோலால் தூக்க உலகனைத்தும்
தான் வாட வாடாத தன்மைத்தே தென்னவன்
நான்மாடக் கூடல்நகர்.

உலகை எல்லாம் துலாக் கோலில் (தராசு தட்டு) ஒரு தட்டில் வைத்து, மதுரையை இன்னொரு தட்டில் வைத்துக் கற்றறிந்த புலவர் பெருமக்கள் நிறுத்துப் பார்ப்பார்களேயானால் உலகம் எல்லாம் வைத்த தட்டு மேலெழ, தென்னவன் பாண்டியனின் மதுரை நகரை வைத்த தட்டு பெருமை எனும் கன மிகுதியால் கீழாகும் தன்மை கொண்டதாயிருக்கும்.

## மதுரையை புலவர்கள் மிக உயர்வாக பார்ப்பதற்கு என்ன காரணம்

ஒன்று இந்த மதுரையில் தான் சங்கம் வைத்து தமிழ்மொழி வளர்த்தார்கள். சங்கம் வைத்து தமிழ் வளர்த்ததன் காரணம் மக்கள் எழுத படிக்க தெரிய வேண்டும் என்பதற்காக. எழுத படிக்க அறியும் போது பல நூல்களை கற்று அதில் கூறப்பட்டதை அறிந்து நல்லது எது, கெட்டது எது என அறிய முடியும். மேலும் உண்மையான உண்மை எது, பொய்யானது எது என்று அறிய முடியும். உண்மையை அறியும் போது மக்கள் தரமான வாழ்க்கையை வளமாக நீடித்து வாழ முடியும்.

இரண்டாவது சத்தியத்தை (100% உண்மை) பின்பற்றுவதில் தமிழர்கள் மிக அதிக முக்கியத்துவம் கொடுத்தார்கள் என்பதை சேர, சோழ, பாண்டிய அரசர்களின் வரலாறுகளை பார்க்கும் போது அறிய முடியும். மிக அதிகமாக மதுரை மக்களும் பாண்டிய அரசர்களும் சத்தியத்தை பெரிதாக நினைத்து வாழ்க்கையில் சத்தியத்தை காப்பதில் பெரிய கவனம் செலுத்தினார்கள்.

இது மதுரை மண்ணுக்கே உரிய பெருமை. எப்படி பாண்டியன் நெடுஞ்செழியன் தனது தவறான தீர்ப்பால் கோவலனை கொன்று விட்டதை அறிந்த அந்த நிமிடமே மூர்ச்சையாகி இறக்கிறார், அவர் மனைவி கோப்பெருந்தேவியும் கணவன் இறந்ததும் அவரும் மூர்ச்சையாகி இறக்கிறார். இது போல் பொற்கை பாண்டியன் என பல அரசர்கள் சத்தியத்தை பின்பற்றி வாழ்ந்தார்கள்.

அரசர்கள் மட்டும் சத்தியத்தை காக்கவில்லை, மதுரை மக்களும் சத்தியத்தை பின்பற்றினார்கள். அரசவை புலவரான நக்கீரர் கேள்வி கேட்பது கடவுளேயானாலும் தப்பு என்றால் அது தப்பு தான் என்று வாதாடுகிறார். தமிழ் மக்கள் தங்களுக்கு மீறிய சக்திக்கு பயந்து தவறுக்கு ஒத்து போக மாட்டார்கள் என அழுத்தமாக சொல்லக் கூடியவர்கள் மட்டும் இல்லை செயலிலும் காட்ட கூடியவர்கள் தமிழர்கள் என அறியலாம்.

கண்ணகி சத்தியத்தை காக்க அரசன் என்றும் பயப்படாமல் நீதி வேண்டி அரசவையில் துணிச்சலுடன் வாதாடியதும் இந்த மதுரையில் தான். ஒரு பாண்டிய அரசன் போர்களத்தில் முதுகில் புண்பட்டு விட்டது என்பதற்காக இது என் இனத்திற்கு அவமானமானது என்று உண்ணாமலிருந்து உயிர் விடுகிறார்.

இது பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் நடந்தது மட்டுமில்லை. இன்றும் பெருந்தலைவர் காமராஜர் சத்தியத்திற்காகவே தன் வாழ்நாள் முழுவதும் வாழ்ந்து காட்டியவரும் தமிழ் மரபில் பிறந்த மதுரை மண்டலத்தைச் சேர்ந்தவர் தான்.

இந்த உலகில் மக்கள் சத்தியத்திற்கு கட்டுப்பட்டு தான் ஆக வேண்டும், சத்தியத்தை மீறி செயல்படும் போது அதற்கான விளைவுக்கு மிக பெரிய விலை கொடுத்தாக வேண்டும்.